04.03.2024

<u>கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமா்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா.10

| | | | |
|---|---|---|---|
| பெயா் | சித்ரா | | |
| க/பெ | கணேசமூா்த்தி | | |
| கிராமம் | நீலமங்கலம் | தொழில் | |
| தாலுக்கா | கள்ளக்குறிச்சி | வயது | 38 /2024 |
| மாவட்டம் | கள்ளக்குறிச்சி | தேதி | |

இன்று உதவியாளா் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாாிக்கப்படுகிறாா்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கள்ளக்குறிச்சி மது அமல் பிாிவு தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014ம் ஆண்டு இருப்பு பாதை காவல் நிலையத்தில் காவலராக பணி செய்தேன். ஆஜா் எதிாிகள் அனைவரையும் எனக்கு தொியும். அவா்கள் அனைவரும் அந்த சமயத்தில் காவல் நிலையத்தில் பணி புாிந்தவா்கள். இந்த வழக்கில் இறந்துபோன ஜெயவேலு எனக்கு தொியும். கடந்த 06.05.2014ந் தேதி எங்கள் காவல் நிலையத்தில் மதியம் 2 மணி முதல் இரவு 9 மணி வரை (பி ஷிப்ட்) பிளா்ட்பாா்ம் (இருப்பு பாதை நடைமேடை) பணியில் இருந்தேன். அன்று நான் பணிக்கு ஆஜராகிய போது ஜெயவேல் என்பவா் காவல் நிலையத்தில் தரையில் அமா்ந்திருந்ததை நான் பாா்த்தேன். பிறகு என் பணி முடித்து மீண்டும் காவல் நிலையம் வந்து பணி முடிந்ததை குறித்து ாிப்போா்ட் செய்ய வந்தபோதும் நான் அவரை பாா்த்தேன். மறுநாள் 07.05.2014ந் தேதி காலை 8 மணிக்கு மீண்டும் பாரா பணிக்கு காவல் நிலையம் வந்தபோது அந்த ஜெயவேல் ரொம்ப உடல்நிலை முடியாத நிலையில் தரையில் கையுன்றிக்கொண்டு சுவற்றில் சாய்ந்து கொண்டு இருந்ததை நான் பாா்த்தேன். முதல் நாள் ஏற்கனவே அவரை பாா்த்தபோது அவா் சட்டையில்லாமல் இருந்தாா். என்னை பாா்த்தவுடன் கூச்சப்பட்டுகொண்டு உடலை மறைத்துக்கொண்டாா். மறுநாள் அவரை பாா்த்தபோது அவரது உடலில் ஆடைகள்

விலகி இருந்தது. ஆனால் அவரால் அதை சரிசெய்துக்கொள்ள முடியவில்லை. அப்போது பாரா பணியிலிருந்த காவலர் பாரதிதாசனிடம் இதுபோன்று இருக்கும் ஒரு நபரை ஏன் என் வசம் ஒப்படைத்துவிட்டு செல்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் எந்தபதிலும் சொல்லவில்லை. அப்போது திருக்குமரன் என்பவர் நீ வேண்டும் என்றால் அவரை போய் விசாரி என்று கோபமாக பேசினார். ஆனால் ஆய்வாளர் திரு.வாசுதேவன் நீங்கள் பணியில் இருங்கம்மா நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறினார். நான் அப்போது காவல் நிலையத்தில் பின்பக்கம் உள்ள வாசல் படி அருகில் அமர்ந்து காலை உணவு சாப்பிட்டு கொண்டு இருந்தேன். அப்போது காவல் நிலையத்தின் இருபக்க கதவுகளும் சாத்தப்பட்டது. அப்போது தொலைபேசியில் அழைப்பு வந்தது. நான் அதை அட்டன் செய்ய சென்ற போது நீங்கள் சாப்பிடுங்கம்மா நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என ஆய்வாளர் கூறினார். அப்போது ஜெயவேலை பார்த்து உடம்புக்கு என்னடா செய்கிறது. நன்றாக குதிக்கவும், தரையில் உருளும் படியும் சொன்னார்கள். சிறிது நேரத்தில் ஆய்வாளர் அவர்களின் டாடா சுமோ வாகனம் காவல் நிலையத்தின் பின்பக்கத்திலிருந்து முன்பக்கம் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. மீண்டும், மீண்டும் தொலைபேசியில் அழைப்பு வந்தது. உள்ளே இருப்பவர்கள் ஏன் அதை எடுக்கவில்லை என்று நான் சென்று பார்க்க போனேன். காவல் நிலையத்தின் உள்ளே யாரும் இல்லை. தொலைபேசியில் வந்த அழைப்பை நான் தொடர்பு கொண்டேன். அப்போது மற்ற காவல் நிலையங்களிலிருந்து உங்கள் காவல் நிலையத்தில் ஒருவன் இருந்தானே அவனுக்கு என்ன ஆனது என்று அடுத்தடுத்து கேட்கப்பட்டது. அவருக்கு உடல்நிலை சரியில்லை. எனவே மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பார்கள் என்று யூகத்தின் அடிப்படையில் அவர்களுக்கு பதில் கூறினேன். மீண்டும் மீண்டும் அவ்வாறே தொலைபேசியில் கேட்கப்பட்டதால் எனக்கு பயம் ஏற்பட்டது. காவல் நிலையத்திற்கு அன்று பணிக்கு வருபவர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர். அவர்கள் தனித்தனியாக ஏதோ பேசிக்கொண்டு இருந்தார்கள். அப்போது நிலைய எழுத்தர் புருஷோத்தமன் அவர்கள் காவல் நிலையத்திற்கு துப்பரவு செய்ய வழக்கமாக வைத்திருந்த காசி என்பவரை அழைத்து காவல் நிலையத்தை கழுவ சொல்லி அவர்

காவல் நிலையத்தை கழுவிவிட்டார். அருகில் உள்ள காவல் நிலையங்களில் உள்ள தனி பிரிவு போலீசார் காவல் நிலையம் வந்து என்னிடம் உங்கள் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஜெயவேல் என்பவர் இறந்துவிட்டார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா தெரியாதா? என்று கேட்டார்கள். அப்போது தான் நான் ஏதோ நடந்துள்ளது என்று யூகித்தேன். அவர்கள் சொன்ன பிறகு தான் ஜெயவேல் என்பவர் இறந்துவிட்டார் என்ற விவரமே எனக்கு தெரியவந்தது. எனக்கு பணி முடிந்தது. ஆனால் நான் வீட்டிற்கு செல்லாமல் பிளாட்பார்மில் இருந்து அப்போது வெளியில் சென்றவர்கள் திரும்ப காவல் நிலையம் வந்தார்கள். வந்து நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் எங்கள் காவல் நிலைய பாரா புக்கை எடுத்து ஏற்கனவே அதில் பதிவு செய்யப்பட்டவைகளை கிழித்து விட்டு நான் பாராவில் பாரா பணிக்கு வந்தபிறகு என் பாராவில் அந்த ஜெயவேலுவை அனுமதிக்கப்பட்டது போல் காட்டினார்கள். அதற்கு நான் இதற்கு முன்பே காவல் நிலையத்தில் இருந்தவனை இன்று என் பாராவில் அனுமதிக்கப்பட்டது போல் காட்டுகிறீர்களே என்று கேட்டுவிட்டு மேல் அதிகாரிகள் சொல்கிறார்களே என்று நான் அதில் கையொப்பம் இட்டேன். என்னிடம் காட்டப்படுவது தான் sentry relive register para book என்றால் சரிதான். அந்த பாரா புக்கில் 187வது பக்கத்தில் சிவப்பு மையில் ஜெயவேல் என்பவரை அனுமதித்ததாக காட்டப்பட்டுள்ளது. அந்த பாரா புத்தகத்தில் 187வது பக்கம் அ.சா.ஆ.7 ஆகும். அதன் பிறகு என்னை ஆய்வாளர் கையெழுத்து போட சொன்னார் நான் போட்டேன். அந்த பாரா புத்தகத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. நீதிமன்றத்திலிருந்து நீதித்துறை நடுவர் அவர்கள் ஜெயவேல் என்பவர் இறந்தது குறித்து விசாரிப்பதற்காக வந்தார். இது சம்மந்தமாக நீதித்துறை நடுவர் அவர்கள் விசாரணை செய்தார்கள். நான் அன்று பிளாட்பார்ம் பணியில் இருந்தேன் என்றும் எனக்கு இது சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் சொன்னேன். மற்றும் அதை கடிதமாக கேட்டார்கள். நான் எழுதி கையொப்பம் இட்டு கொடுத்தேன். நான் பயத்தால் அவ்வாறு சொன்னேன். நான் வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் அவர்கள் விசாரித்தபோது உண்மையில் நடந்தவைகளை கூறிக்கொண்டேன். மேலே சொல்லியவாறு நான் பணியிலிருந்தபோது என்ன

உண்மையில் நடந்ததோ அதை சிபிசிஐடி ஆய்வாளரிடம் சொன்னேன். இது சம்மந்தமாக சிபிசிஐடி போலீசார் என்னை மீண்டும் விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

என்னை சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்தபோது நான் காலை 8 மணிக்கு ஜெயவேலுவை பற்றி சக காவலர்களிடம் எதுவும் கேட்டதாக சொல்லவில்லை. சிபிசிஐடி போலீசார் என்னை விசாரிக்கும்போது திருக்குமரன் என்பவர் கோபமாக என்னிடம் நீ வேண்டுமானால் ஜெயவேலுவிடம் விசாரி என்று கோபமாக சொன்னார் என்று சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த நேரத்தில் திருக்குமரன் அங்கு இல்லை என்றும், நான் வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சிபிசிஐடி போலீசார் என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்றை தினம் காவல் நிலையத்தில் இருந்ததால் என்னையும் அந்த வழக்கில் சேர்த்துவிடுவேன் என்று சிபிசிஐடி போலீசார் மிரட்டியதால் நான் இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய பாராவில் தான் ஜெயவேல் ஒப்படைக்கப்பட்டார் என்றால் முந்தைய நாளிலேயே அங்கு இருக்கிறார். ஆனால் ஆவணங்கள் அடிப்படையில் அவர் எனது பாராவில் இருப்பதாக தான் உள்ளது. என்னிடம் பாராவை ஒப்படைக்கும்போது கைதி என்ன நிலையில் இருக்கிறார் என்பதை பார்த்து தான் நான் பாராவை வாங்குவேன். நான் பாரா வாங்கும் போது அவர் என்ன நிலையில் இருந்தார் என்றால் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் ஆனால் காயங்கள் எதுவும் அவருக்கு இல்லை. முதலில் என்னை வேலூர் ஆய்வாளர் விசாரித்தார். ஆய்வாளர் விசாரிக்கும் போது நான் உண்மையை சொன்னேனா என்றால் நான் ஆய்வாளரிடம் சொன்னது தான் உண்மை. ஆய்வாளரின் விசாரணையில் நான் ஜெயவேல் என்பவருக்கு காயம் இருந்ததாக சொல்லவில்லை. என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள். நான் நீதித்துறை நடுவரிடம் சொன்னது உண்மையா அல்லது ஆய்வாளரிடம் சொன்னது உண்மையா என்றால் ஆய்வாளரிடம் சொன்னது தான் உண்மை. பாராவை ஒப்படைக்கும்போது இது

தொடர்பாக என்னிடம் எத்தனை ஆவணங்களில் கையெழுத்து வாங்குவார்கள் என்றால் ஒரு கையெழுத்து தான் வாங்குவார்கள். கைதிகளின் தனிப்பட்ட உடமைகளை ஒப்படைக்கும்போது அதையும் என்வசம் ஒப்படைப்பார்கள். இந்த வழக்கில் அது போன்று என்னிடம் ஜெயவேல் உடமைகள் ஒப்படைக்கப்பட்டதா என்றால் இல்லை. என்னிடம் தற்போது காட்டிய ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்பு தயாரிக்கப்பட்டவை என்றும், எனக்கு வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. ஆரம்பத்திலிருந்தே என் பெயரில் குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை. நான் சிபிசிஐடி போலீசாருக்கு சாதகமாக செயல்படாவிட்டால் என் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படும் என்ற மிரட்டலுக்கு பயந்து தான் அவர்களுக்கு ஆதரவாக செயல்படுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

சம்பவம் தொடர்பாக என்னை திருச்சி இரயில்வே காவல் துறை கண்காணிப்பாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. சிபிசிஐடி போலீசார் என்னை இரயில்வே நிலையத்திற்கு வரவழைத்து விசாரணை செய்தார்கள். விசாரித்த காலத்தில் நான் 7.05.2014ந் தேதி மீண்டும் காலை 8 மணிக்கு மீண்டும் பாரா பணிக்கு காவல் நிலையம் வந்தேன் என்று சொல்லியுள்ளேன். அப்போது ஜெயவேல் என்பவர் மிகவும் சோர்வாக தரையில் கையை ஊன்றி சுவற்றில் சாய்ந்து கொண்டிருந்ததை நான் பார்த்ததாக சொல்லியுள்ளேன். அவர் சட்டை இல்லாததால் என்னை பார்த்தவுடன் மறைத்துக்கொண்டார் என சொல்லியுள்ளேன். நான் அப்போது பாரா பணியிலிருந்த பாரதிதாசன் என்பவரிடம் இதுபோன்ற நபர்களை ஏன் என் பாரா வசம் ஒப்படைக்கிறீர்கள் என்று கேட்டேன். அப்போது ஆய்வாளர் திரு.வாசுதேவன் என்னிடம் நீங்கள் இருங்கம்மா நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னதாக நான் சொல்லியுள்ளேன். மேலும் அப்போது காவல் நிலையத்தின் இரண்டு கதவுகளையும் சாத்திவிட்டதாக சொல்லியுள்ளேன். அப்போது ஆய்வாளர் நீங்கள் சாப்பிடுங்கம்மா நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னார். அப்போது ஜெயவேலை பார்த்து உடம்புக்கு என்ன செய்கிறது நன்றாக குதிக்கவும், தரையில் உருளவும் என்று சொன்னதாக

விசாரணையில் சொன்னேன். ரவி என்பவர் காலை 8 மணிக்கு பணிக்கு வருவார். அவர் எஸ்.பி ஏட்டு என்பதால் எப்போது வேண்டுமானாலும் பணிக்கு வருவார், போவார். என்னிடம் தற்போது காட்டிய ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்பு தயாரிக்கப்பட்டவை என்றும், எனக்கு வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. ஆரம்பத்திலிருந்தே என் பெயரில் குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை. நான் சிபிசிஐடி போலீசாருக்கு சாதகமாக செயல்படாவிட்டால் என் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படும் என்ற மிரட்டலுக்கு பயந்து தான் அவர்களுக்கு ஆதரவாக செயல்படுகிறேன் என்றால் சரியல்ல.